DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

Case No.CC 133/2023

Prosecution witness – PW.2

| | | | |
|---|---|---|---|
| Name | :திருமதி.ராதிகா | Caste: | |
| Husband's Name | : துரைச்சாமி | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

07.11.2025 – 12.05 PM

எதிரிகள் ஆஜர் இல்லை. மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

முதல் விசாரணை:–

1. நான் சிலிப்பி கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது தந்தை. இவ்வழக்கு எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் உள்ளூர்காரர்கள். எனது தங்கையை எதிரிகளின் வீட்டார் கடத்திச் சென்றது சம்மந்தமாக எங்கள் குடும்பத்தாருக்கும் எதிரிகள் குடும்பத்தாருக்கும் இடையே நீண்ட நாட்களாக பிரச்சனை இருந்து கொண்டே தான் இருக்கிறது. கடந்த 28.07.2022 ம் தேதி மாலை 05.30 மணியளவில் நான் எனது வீட்டிலிருந்தபோது எனது அப்பா எனக்கு போன் செய்து எதிரிகள் இருவரும் எனது அப்பாவின் இரு சக்கர வாகனத்தில் மோதிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டதாகவும், அதில் எனது அப்பாவிற்கு காயம் ஏற்பட்டிருப்பதாகவும் அருகில் இருந்தவர்கள் உதவி செய்ததாகவும் கமுதி அரசு மருத்துவமனைக்கு செல்லவிருப்பதாக கூறினார்.

2. நான் எனது வீட்டருகே உள்ள எனது சித்தப்பா செல்லமணி, குழந்தைசாமி, முருகேசன் ஆகியோர்களை அழைத்துக் கொண்டு கமுதி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். எனது அப்பாவிற்கு மருத்துவமனையில் சிகிச்சை வழங்கப்பட்டு கொண்டிருந்தது. நான் பார்த்தபோது எனது அப்பாவிற்கு வலது முழங்காலில் இரத்தக்காயம் இருந்தது. அவர் என்னிடம் நெஞ்சு வலிப்பதாக தெரிவித்தார். இது நிமித்தம் எனது அப்பா போலீசாரிடம் புகார் வாக்குமூலம் அளித்தார். அதன் பேரில் போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–

1. நானும் எனது தாயாரும் எனது வீட்டில் தான் இருந்தோம். எனது தகப்பனார் சம்பவ இடத்தில் இருந்து தான் எனக்கு போன் செய்தார். எனது தங்கையை கடத்தியதாக சொல்லப்படுகிற வழக்கில் இவ்வழக்கு எதிரிகள் அந்த வழக்கில் எதிரிகளாக இல்லை என்றால் சரிதான். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் கூறி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

THANGA KARTHIKA Digitally signed by THANGA KARTHIKA
Date: 2025.11.07 17:29:09 +0530